## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 5-4 - ஊரெல்லாம்
## (மடலூர்தற்கு இயலாதபடி இரவு நீண்டது குறித்துத் தலைவி வருந்திக் கூறுதல்)

3150 * ஊரெல்லாம் துஞ்சி * உலகெல்லாம் நள்ளிருளாய் *
நீரெல்லாம் தேறி * ஓர் நீளிரவாய் நீண்டதால் **
பாரெல்லாம் உண்ட * நம் பாம்பணையான் வாரானால் *
ஆர்? எல்லே! வல்வினையேன் * ஆவி காப்பார் இனியே 1

3151 ஆவி காப்பார் இனி யார்? * ஆழ்கடல் மண் விண் மூடி *
மாவிகாரமாய் * ஓர் வல்லிரவாய் நீண்டதால் **
காவிசேர் வண்ணன் * என் கண்ணனும் வாரானால் *
பாவியேன் நெஞ்சமே! * நீயும் பாங்கல்லையே 2

3152 நீயும் பாங்கல்லை காண் * நெஞ்சமே! நீளிரவும் *
ஓயும் பொழுதின்றி * ஊழியாய் நீண்டதால் **
காயும் கடுஞ்சிலை * என் காகுத்தன் வாரானால் *
மாயும் வகை அறியேன் * வல்வினையேன் பெண் பிறந்தே 3

3153 பெண் பிறந்தார் எய்தும் * பெருந்துயர் காண்கிலேன் என்று *
ஒண்சுடரோன் * வாராதொளித்தான் ** இம்மண்ணளந்த
கண் பெரிய செவ்வாய் * எங்காரேறு வாரானால் *
எண் பெரிய சிந்தை நோய் * தீர்ப்பார் ஆர் என்னையே? 4

3154 ஆர் என்னை ஆராய்வார்? * அன்னையரும் தோழியரும் *
நீர் என்னே? என்னாதே * நீளிரவும் துஞ்சுவரால் **
காரன்ன மேனி * நம் கண்ணனும் வாரானால் *
பேரென்னை மாயாதால் * வல்வினையேன் பின்னின்றே 5

3155 பின்னின்ற[1] காதல் நோய் * நெஞ்சம் பெரிதடுமால் *
முன்னின்று இராவூழி * கண் புதைய மூடிற்றால் **
மன்னின்ற சக்கரத்து * எம் மாயவனும் வாரானால் *
இந்நின்ற நீளாவி * காப்பார் ஆர் இவ்விடத்தே? 6

3156 காப்பார் ஆர் இவ்விடத்து? * கங்கிருளின் நுண்துளியாய் *
சேட்பாலதூழியாய்ச் * செல்கின்ற கங்குல்வாய் **
தூப்பால வெண்சங்கு * சக்கரத்தன் தோன்றானால் *
தீப்பால வல்வினையேன் * தெய்வங்காள்! என் செய்கேனோ? 7

3157 தெய்வங்காள்! என் செய்கேன்? * ஓரிரவு ஏழூழியாய் *

[1] பின்னின்று

மெய்வந்து நின்று * எனதாவி மெலிவிக்கும் **
கைவந்த சக்கரத்து * என் கண்ணனும் வாரானால் *
தைவந்த தண்தென்றல் * வெஞ்சுடரில் தானடுமே 8

3158 வெஞ்சுடரில் தானடுமால் * வீங்கிருளின் நுண்துளியாய் *
அஞ்சுடர வெய்யோன் * அணிநெடுந்தேர் தோன்றாதால் **
செஞ்சுடர்த் தாமரைக்கண் * செல்வனும் வாரானால் *
நெஞ்சிடர் தீர்ப்பார் இனி யார்? * நின்றுருகுகின்றேனே 9

3159 நின்றுருகுகின்றேனே போல * நெடுவானம் *
சென்றுருகி[2] நுண்துளியாய்ச் * செல்கின்ற கங்குல்வாய் **
அன்றொருகால் வையம் * அளந்த பிரான் வாரான் என்று *
ஒன்றொருகால் சொல்லாது * உலகோ உறங்குமே 10

3160 * உறங்குவான் போல் * யோகு செய்த பெருமானை *
சிறந்த பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் சொல் **
நிறம் கிளர்ந்த அந்தாதி * ஆயிரத்துள்[3] இப்பத்தால் *
இறந்து போய் வைகுந்தம் * சேராவாறு எங்ஙனேயோ? 11

**அடிவரவு:** ஊர் ஆவி நீயும் பெண் ஆர் பின் காப்பார் தெய்வம் வெஞ்சுடர் நின்று உறங்கு எங்ஙனேயோ

[2] சென்றுருகு
[3] ஆயிரத்து